

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (10.01.2024) சென்னை, தேனாம்பேட்டை, தமிழ்நாடு சுகாதார திட்ட அலுவலகத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டம், 2024–25ஆம் ஆண்டிற்கான காப்பீட்டுத் தொகை ரூ.1228.27 கோடிக்கான காசோலையை யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் கோவிந்தராவ், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சண்முககனி, யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தலைவர் சத்யஜித் திரிபாதி, பொது மேலாளர் திருமதி.உஷாகிரிஷ், துணை பொது மேலாளர் திருமதி. பிரேமா முகிலன், தலைமை மேலாளர் தேவராஜ், இணை இயக்குநர் மரு.ரவிபாபு மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.




புதுக்கோட்டை மாட்சிமை தாங்கிய மன்னர் கல்லூரியில், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு மாரத்தான் போட்டியில் வெற்றிபெற்றவருக்கு, பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா. மெர்சி ரம்யா, தலைமையில் 09.01.2024 அன்று வழங்கினார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.எம்.மஞ்சுளா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### கல்வி உரிமையைக் காக்க – பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# புதுடெல்லியில் இன்று மாணவர் பேரணி!

## கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் அறிக்கை!

சென்னை, ஜன. 12 -

தேசிய கல்விக் கொள்கையை நிராகரித்து, கல்வி உரிமையைக் காப்பதற்கும்; நாளை பாசிச பா.ஜ.க. அரசை நிராகரித்து, இந்தியாவை காப்பதற்கும் டெல்லியில் மாபெரும் மாணவர் பேரணி நடைபெறுகிறது. இதில் தி.மு.க. மாணவர் அணி உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சியின் 16 மாணவர் அமைப்புகள் ஒன்று கூடி உருவாக்கிய “யுனைடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா” (United Students of India) அமைப்பு பங்கேற்று நடத்துகிறது. டெல்லி பேரணிக்கு தி.மு.க. மாணவர் அணியின் அடலேறுகளே, மாணவர் சேனையே அணி திரண்டு வாரீர்! வாரீர்!! என்று தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு: -

கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, பாசிச பா.ஜ.க. அரசின் ஜனநாயக விரோத ஆட்சியை கண்டித்தும், மாணவர் விரோத கல்விக் கொள்கை, சட்டங்கள், திட்டங்கள் குறிப்பாக தேசிய கல்விக் கொள்கை 2020, நீட் தேர்வுக்கு எதிராக கழக மாணவர் அணி தொடர்ந்து போராடி கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே.

இந்திய துணைக்கண்டத்தை காக்கும் நோக்கத்தோடு, பாசிச பா.ஜ.க அரசை எதிர்த்து, இந்தியா (I.N.D.I.A.) கூட்டணியில் இடம்பெறும் AISA, AISB, AISF, CRJD, CYSS, DSF, Dravidan Students’ Federation, NSUI, PSF, PSU, RLD Chatra Sabha, Samajwadi Chatra Sabha, Satro Mukti Sangram Samiti, SFI, TSU ஆகிய அமைப்புகளுடன் தி.மு.க. மாணவர் அணி இணைந்து “யுனெடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா” (United Students of India) என்ற அமைப்பை உருவாக்கியது.

இந்த அமைப்பின் செய்தியாளர்கள் சந்திப்பு கடந்த 21.11.2023 அன்று டெல்லியில் நடைபெற்றது. அதில், பாசிச பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள தேசிய கல்விக் கொள்கை 2020 மாணவர்களின் கல்வி உரிமைக்கு எதிரானது. அது கல்வியை காவிமயமாக்கவும், வணிகமயமாக்கவும், கார்ப்பரேட்களிடம் தாரை வார்க்கவும், அனைவருக்குமான கல்வி உரிமையை மறுக்கவும், இந்தி, சமஸ்கிருத திணிப்பிற்கும் அடித்தளமிடுகிறது. இந்தியாவின் பன்முகத் தன்மையை சிதைத்து ஒற்றைப் பண்பாட்டு தேசமாக அதிலும் குறிப்பாக சமஸ்கிருத பண்பாட்டுத் தேசமாக இந்தியாவை கட்டமைக்க வழிவகுக்கும் தேசிய கல்விக் கொள்கை 2020ஐ நிராகரிக்க வேண்டுமென்றும்,

கல்வியே ஒரு மனிதனுக்கு அறிவையும், ஆற்றலையும் சுயசிந்தனையும், சுய மரியாதையையும், சுதந்திரத்தையும் வழங்கக்கூடியது. தனிமனித சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் மாண்பு. அந்த ஜனநாயகத்தை காக்கும் தூணாக விளங்கும் கல்வியை ஏழை எளியோரிடமிருந்து பறித்து, பணக்கார வர்க்கத்திடம் வழங்க சதிதிட்டம் செய்கிறது பாசிச பா.ஜ.க. அரசு. அதன்மூலம் கல்வி மறுக்கப்பட்ட சமூக நிலையை மீண்டும் கட்டமைக்கவே விரும்புகிறது தேசிய கல்விக் கொள்கை 2020. கல்வி மறுக்கப்பட்ட சமூகம் தனது சுயமரியாதையும், சுதந்திரத்தையும் இழந்துவிடும். அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய அத்தனை உரிமைகளையும் இழக்கச் செய்து சுதந்திரமற்றவர்களாய், சுயமரியாதை அற்றவர்களாய், ஒட்டுமொத்த ஜனநாயகத்தை அழிக்க முயல்கிறது பாசிச பா.ஜ.க. அரசு.

எனவே, இந்திய துணைக் கண்டத்தை காக்க, இந்தியாவின் பன்முகத்தன்மையை, ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை, மாணவர்களின் கல்வி உரிமையை காத்திட தேசிய கல்விக் கொள்கை 2020ஐ நிராகரிப்போம்! பாசிச பா.ஜ.க. அரசை நிராகரிப்போம்!! என்றும், கல்வி உரிமையை காப்போம்! இந்தியாவை காப்போம்!! என்ற முழக்கத்துடன், “Save EDUCATION Reject NEP; Save INDIA Reject BJP” என்ற முழக்கத்துடன், இன்று (12.01.2024) தலைநகர் டெல்லியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்கும் நாடாளுமன்றம் நோக்கிய மாபெரும் மாணவர் பேரணி (Parliament March) நடத்திட யுனெடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா (United Students of India) கூட்டமைப்பு எடுத்த முடிவினை அறிவித்தோம்.

அதன்படி, பாசிஸ்ட்டுகளிடமிருந்து இந்திய துணைக் கண்டத்தை காத்திடவும், மாணவர்களின் கல்வி உரிமையையும் பாதுகாத்திடவும் டெல்லியில் நடைபெறும் பேரணிக்கு தி.மு.க. மாணவர் அணியின் அடலேறுகளே, மாணவர் சேனையே அணி திரண்டு வாரீர்! வாரீர்!! என அன்போடு அழைக்கின்றேன்!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் அறிவிப்பு!



நாகை மாவட்ட தி.மு.க. செயல் குழு கூட்டம் இன்று (12.01.2024) காலை 11.00 மணிக்கு மாவட்டக் கழக அலுவலக கூட்ட அரங்கில் மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்

**பொருள்** :

1, ஜனவரி 21 சேலத்தில் இளைஞரணி 2வது மாநில மாநாடு

2.கழக ஆக்கப் பணிகள் .

**என்.கௌதமன்**
செயலாளர்,
நாகை மாவட்ட தி.மு.க.




பரமத்தி வேலூர் தொகுதி, மோகனூர் மேற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த பல்வேறு மாற்று கட்சியினர் நாடு போற்றும் நல்லாட்சி நாயகர் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியால் ஈர்க்கப்பட்டு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் மோகனூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஏ.பி.ஆர்.சண்முகம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் சிவக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி, துணை அமைப்பாளர் பூக்கடை டி.சுந்தர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில்

# 2 இலட்சத்து 83 ஆயிரம் பேருக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்! நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. - எம். ராமலிங்கம் எம்.பி. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

மயிலாடுதுறை ஜன. 12 -

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஒன்றியம் ஆறுபாதி ஊராட்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பொங்கல் திருநாளை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ. பி.மகாபாரதி தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும். பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் எம். ராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் பயனாளிகளுக்கு ரூ 1,000 ரொக்கம், ஒரு கிலோ பச்சை அரிசி, ஒரு கிலோ சக்கரை, முழு கரும்பு மற்றும் வேட்டி, புடவை ஆகியவற்றை சுற்றுச் சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சேகர், மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் வ.யுரேகா, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என் ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன். எல். செல்வமணி, மாவட்டக் கழக பெருளாளர் மகா அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என் இளையபெருமாள், அமுர்த். விஜயகுமார், ஞான. இமையநாதன், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், மங்கை எம்.சங்கர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பெறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரி சங்கர் செம்பனார்கோயில் ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர், துணைத் தலைவர் பாஸ்கர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வி.எஸ்.என்.செந்தில், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செந்தல், மாவட்ட வழங்கல் அலுவலர் பானுகோபன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் துளசிரேகா, ஒன்றியக்குழு உறுப்பினர் இரா.முத்துலெட்சுமி;, ஆறுபாதி ஊராட்சி மன்றத்தலைவர் கே.தமிழரசி, ஆறுபாதி ஊராட்சி மன்றத் துணைத்;தலைவர் எஸ். தேவி; மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கி சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவி ஏற்ற நாள் முதலாக பல எண்ணற்ற சாதனைகளை செய்து வருகிறார். கடந்த மாதம் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நேரடியாக களத்திற்கு சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6000 நிவாரணத்தொகை வழங்க உத்தரவு பிறப்பித்தார். அதேபோல தென் மாவட்டங்களில் வரலாறு காணாத மழை பெய்து பெரிய சேதத்தை ஏற்படுத்தியது. அதன் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் உடனடியாக வழங்க உத்தரவிட்டார். மாதம் மாதம் 15ந்தேதி 1,13,84,000 பெண்களுக்கு வழங்கப்படும் கலைஞர் உரிமைத்தொகை தற்போது பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இந்த மாதம் 10ந்தேதியிலிருந்து வழங்கப்படுகிறது. மயிலாடுதுறை மாவட்டத்தில் கடந்த 7,8ம் தேதிகளில் பெய்த கனமழையின் காரணமாக மாவட்டத்தில் 1,70,000 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக அறுவடைக்கு தயார் நிலையிலிருந்த 18000 ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டுள்ள நெற்கதிர்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மற்றும் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் ஒரு வார காலத்தில் பயிர் செய்யப்பட்டுள்ள கடலை பயிரும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே அதற்கான கணக்கெடுக்கும் பணிக்காக மாவட்ட ஆட்சியர் அவர்கள்,மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்கள் முன்னிலையில்; நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளோம். கணக்கெடுக்கும் பணி நிறைவுபெற்றவுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் ஆறுபாதி மக்களின் சுகாதாரத்தை காக்கும் வகையில் பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் 2 இலட்சத்து 83 ஆயிரம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மொத்தம் 283 மெ.டன் பச்சரிசி, 283 மெ.டன் சீனி, 2 லட்சத்து 83ஆயரம் முழுநீளக்கரும்பு மற்றும் ரூ.28.30 கோடி ரொக்கத்தொகை வழங்கப்படுகிறது.பொங்கல் பரிசுத்தொகுப்பானது கூட்டுறவுத்துறையின்மூலம் நடத்தப்படும் 411 நியாக விலைக்கடைகள், மீனவர் கூட்டுறவு சங்கங்கள் நடத்தும் 10 நியாயவிலைக்கடைகள், மகளிர் சுய உதவிக்குழுவினர் நடத்தும் 10 நியாய விலைக்கடைகள், கோழிவளர்போர் கூட்டுறவு சங்கம் நடத்தும் 1 நியாய விலைக்கடை ஆக மொத்தம் 432 நியாய விலைக்கடைகள் மூலம் வழங்கப்படுகிறது. எனவே நேற்று முதல் வழங்கப்படும் பொங்கல் பரிசு தொகுப்பை பெற்று, வருகிற பொங்கல் திருநாளை நாம் அனைவரும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் பேசினார்.

### சேலத்தில் இளைஞர் அணி மாநாடு:

# கோவை மாநகர் மாவட்ட இளைஞர் அணியினர் பல்லாயிரவர் பங்கேற்பு!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

கோவை, ஜன.12-

கோவை, வடகோவை, கிராஸ்கட்சாலை, கோவை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்ற, கோவை மாநகர் மாவட்ட திமுக நிர்வாகிகளின் ஆலோ சனைக் கூட்டத்தில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் தலைமை தாங்கி, சிறப்புரையாற்றினார்.

பின்னர், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அது வருமாறு:

தமிழ்நாட்டில் இரண்டரை ஆண்டு காலமாக மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி நல்லாட்சி நடத்துகின்ற திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர், அன்பு தளபதி அவர்களுடைய ஆணைக்கிணங்க தமிழ்நாடு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டு துறை அமைச்சர், இளைஞர்களின் எழுச்சி நாயகன், கழகத்தின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் ஜனவரி 21 ஆம் தேதி அன்று சேலத்தில் நடைபெறவிற்கும் திமுக இளைஞர் அணி மாநாட்டில் கோவை மாநகர் மாவட்டத்தில் இருந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர் அணி தம்பிமார்கள் வெண் சீருடையுடன் பங்கேற்பது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழர்களின் பாரம்பரிய திருவிழாவான, உழைக்கும் உழவர் பெருமக்கள் இயற்கைக்கும், மற்ற உயிரினங்களுக்கும் நன்றி செலுத்தும் விதமாக தமிழ்நாடு முழுவதும் ஜாதி, மதபேதங்களை களைந்து, எல்லோரும் ஓர் இனமாய் கொண்டாடப்படுகின்ற பொங்கல் திருநாளை, கோவை மாநகர் மாவட்டம் முழுவதும் அனைத்து பகுதிக் கழகங்கள், வார்டுகளிலும் கழகத்தின் இருவண்ண கொடி ஏற்றிவைத்தும், “சமத்துவப் பொங்கல்” வைத்தும், தமிழர்களின் பாரம்பரியமான பல்வேறு விளையாட்டு போட்டிகளை நடத்தியும், திருவள்ளுவர் சிலைக்கு மலர்மாலை அணிவித்தும், மகளிர்கள் பங்கேற்க கூடிய கோலப்போட்டிகள் போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தி, கோலாகலமாக பொங்கல் விழாவை கொண்டாடுவதென்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இக்கூட்டத்தில், கோட்டை அப்பாஸ், பி.நாச்சிமுத்து, கே.எம்.தண்டபாணி, பி.ஆர்.அருள் மொழி, மு.ரா.செல்வராஜ், தமிழ் செல்வன், வே.பாலசுப்ரமணியம், ஆனந்தகுமார், பலர் கலந்துகொண்டனர்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



முதலமைச்சர் அவர்கள் சென்னையில் நேற்று முன்தினம் (10.01.2024) அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்குப் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியினைத் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாநகராட்சி, சீரங்கபாளையம் நியாய விலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், தலைமையில் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன் , சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உடன் மாநகராட்சி துணை மேயர் திருமதி.மா.சாரதாதேவி, கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.இரவிக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.